THE HON. THIRU K. A. MATHIALAGAN : (a) It is a fact that different weights are being adopted for a bag of paddy according to local custom. In the districts of South Arcot, North Arcot, Chingleput and Salem, the weight for one bag of paddy is being adopted as 75 Kgs. In Thanjavur, Tiruchirappalli, Ramanathapuram and Kanyakumari districts, is is being adopted as 57 Kgs. In Trunelveli district, it is being adopted as 65 Kgs. In Madurai district, it is being adopted as 65 Kgs. in a few places and as 57 Kgs. in most of the areas.

(b) The Government have not prescribed the size of a bag for any district. The adoption of weight for a bag of paddy depends upon the size of the bag according to local custom. It does not affect payment of value for procurement as it is paid only in the basis of weight of the quantities handed over to the Civil Supplies Department.

உருளைக் கிழங்கு

*260 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1957 முதல் 1966 வரை நமது ராஜ்யத்தில் உருளைக் கிழங்கு உற்பத்தி எவ்வளவு?

(இ) வெளிநாடுகளுக்கும், வெளி ராஜ்யங்களுக்கும் ஏற்றுமதி ஆகிறதா ? எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) : விவர அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார் மேஜையின் மேல் வைத்திருக்கக் கூடிய இந்த விவர அறிக்கையைப் பார்த்தால், 1957-58 லிருந்து 1965-66 வரையிலே ஆரம்பத்திலிருந்து உற்பத்தியைவிட மிகவும் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? மேலும் உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதற்கு ஊக்கம் செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : உருளைக் கிழங்கு உற்பத்திக் குறைவுக்கான காரணங்களை கனம் உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதனுடைய உற்பத்தி லேட் பிளைட் என்ற வியாதியால் பாதிக்கப்பட்டது, அதனால் குறைந்துவிட்டது.

*261 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960 முதல் 1966 வரையில் வெளி நாடுகளிலிருந்து உருளைக் கிழங்கு விதை இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா? எந்தெந்த நாடுகளிலிருந்து, எவ்வளவு ?